**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 5/2022

பெயர் – சுப்புலட்சுமி (PW1)

நாள் – 04.06.2026.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கறிஞருக்கு யார் சொன்னார் என்றால நான் தான் சொன்னேன். மேற்படி வழக்கில் நான் என்ன என்ன பரிகாரங்கள் கோரியுள்ளேன் என்றால் எனது அப்பாவின் சொத்து எனக்கு வேண்டும் என்று கோரியுள்ளேன். வழக்கு சொத்தானது ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டதென்றால் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. எனதுஅப்பாவின் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் நான்கு நபர்கள். அவர்கள் யார் யார் என்றால் ராஜ்தேவர், ராமசாமி, முருகன், வேலுச்சாமி ஆகியோர்கள். வழக்கு சொத்து ஆதியில் யாருக்குபாத்தியப்பட்டதென்றால் எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது, எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது மட்டும் கிடையாதென்றால் எனது தாத்தாவால் எனது அப்பாவிற்கு கொடுக்கப்பட்ட சொத்து ஆகும்.

மேற்படி சொத்தானது எனது அப்பாவிற்கு எப்போது கொடுக்கப்பட்டது என்றால் நாங்கள் பிறப்பதற்கு முன்பாகவே கொடுக்கப்பட்டது. மேற்படி சொத்தானது எனது அப்பா பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதென்றால் பட்டா எனது அப்பாவின் பெயருக்கு வழங்கப்பட்டது. மேற்படி சொத்தின் மொத்த விஸ்திரணம் என்னவென்றால் 82 செண்ட், 3 ல் 1 பங்கு ஆகும். 3 ல் 1 பங்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் எவ்வளவு செண்ட் எனது அப்பாவின் பெயருக்கு வந்துள்ளதென்றால் அது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு தான் நீதிமன்றத்திற்கு நான் வந்துள்ளேன்.

மேற்படி சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.420 ஆகும். சொத்தின் நான்குமால் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனதுஅப்பா எப்போது இறந்தார் என்றால் 2020 ம் ஆண்டு இறுந்துவிட்டார். என்னுடன் பிறந்தவரகள் என்னோடு சேர்ந்து 5 நபர்கள். எனது அப்பா உயிரோடு இருந்த சமயத்தில் வ ழக்கு சம்மந்தமாக எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் அவர் உயிரோடு இருந்த சமயத்தில் வழக்கு சொத்தினை அவரும் அம்மாவும் தான் அனுபவித்துவந்தார்கள். நான்

தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆனது குருசாமி தேவர் மகன் ராமசாமி தேவர், ராமசாமி தேவர் மகன் முருகன் தேவர், சுப்பையா தேவர் மகன் ராமசாமி தேவர் ஆகியோர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறதா என்றால் எழுதப்பட்டிருக்கின்றது. யார்யாருக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதை தீர்மானிக்கும் போதுதான் பிரச்சணை ஏற்பட்டு நீதிமன்றம் வந்துள்ளேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).